258, எம் வின்செண்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர் ஸ்ரீலங்கா, 'Learning to Make a Difference' என்ற முன்னெடுப்பினூடாக 7,000 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஆதரவளிக்கிறது

*இலத்திரனியல் முறை கற்றலில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ஊழியர் மனித மணித்தியாலங்களுக்கும் சிறுவர்களுக்கான பாடசாலைப் பொருட்களுக்கு நிதியுதவியளிக்கிறது*

**கொழும்பு, டிசம்பர் 26:** யூனிலீவர் ஸ்ரீலங்கா தனது வருடாந்த 'Learning to Make a Difference' முயற்சியின் ஒன்பதாவது ஆண்டில் காலடியெடுத்து வைத்துள்ளதுடன், இது தனது சௌபாக்யா தொழில்முயற்சியாளர்களான பாடசாலை மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், இலத்திரனியல் முறையில் சுய கற்றலுக்காக ஒவ்வொரு ஊழியர் செலவிடும் மனித மணித்தியாலத்தையும் ரூபாவாக மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக திரட்டப்படும் நிதியானது சிறுவர்களின் கல்விக்கு தேவையான அத்தியாவசிய பாடசாலைப் பொருட்களை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

சௌபாக்யா என்பது, இலங்கையின் சமுர்த்தி அதிகார சபையுடன் இணைந்து செயற்பட்டு வரும் பழமையான அரச - தனியார் துறை கூட்டாண்மைகளில் ஒன்றாகும். யூனிலீவர் தயாரிப்புகளின் நேரடித் தூதுவர்களாக கிராமப்புறப் பெண்கள் நிலைபேண்தகு வாழ்வாதாரத்தைச் சம்பாதிக்க இது உதவுகிறது. 2003 ஆம் ஆண்டு ஐந்து துணிச்சலான பெண்களுடன் தொடங்கப்பட்ட இந்த திட்டம் இன்று 5,000 சௌபாக்யா தொழில்முயற்சியாளர்களின் ஈடுபாட்டைக் கொண்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு முதல் 7,000 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் வாழ்க்கையில் 'Learning to Make a Difference' சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்களின் கற்றல் அபிலாஷைகளை வளர்த்து வருகிறது. ஏனைய பல அம்சங்களுக்கு மத்தியில், அனுசரணை வழங்கப்படுகின்ற ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலை புத்தகப் பை, அப்பியாசப் புத்தகங்கள், வண்ண பென்சில்கள், பென்சில் பெட்டிகள், கேத்திர கணிதக் கருவிகள் மற்றும் பலவற்றைப் பெற்றுக்கொள்கிறார்கள். 2021 ஆம் ஆண்டில், யூனிலீவரின் நல்வாழ்வுக்கான அணியும் தங்கள் உடற்பயிற்சி நேரத்தை இந்த நன்கொடைக்கு மாற்றுவதன் மூலம் பங்களித்தது.

**யூனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளத்துறைப் பணிப்பாளரான அனன்யா சபர்வால்** அவர்கள் கூறுகையில், *"கற்றுக்கொள்வதற்கான மிகவும் அர்த்தமுள்ள வழி, மற்றவர்களுக்குக் கற்க உதவுவதே என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்து, எங்கள் இலத்திரனியல் வடிவ கற்றல் பாடநெறிகளில் ஈடுபடுவதற்கு தமது நேரத்தை எடுத்துக் கொண்டதாக எங்கள் ஊழியர்கள் பலரும் என்னுடன் பகிர்ந்து கொண்டனர். இது எங்கள் ஊழியர்கள் மூலமாக நாங்கள் வெளிக்கொண்டு வந்த, சிறப்பான நோக்கத்துடன் கூடிய கற்றலின் சக்தியாகும். எமது அறிவு, திறன்களைப் பட்டைதீட்டி, எதிர்காலத்திற்கு ஏற்றதாக ஆக்குவதற்கு, எங்களின் சொந்த கற்றல், டிஜிட்டல் மற்றும் வளர்ச்சிப் பயணத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பையும் எங்களின் 'நீங்கள் கற்றுக்கொள்வதால், அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்' (As you learn, they learn) என்ற சிந்தனை எங்களுக்கு வழங்கியுள்ளது,"* என்று குறிப்பிட்டார்.

நன்கொடையை வெளிக்கொண்டு வருவதற்காக, ஊழியர்கள் யூனிலீவரின் இலத்திரனியல் வடிவ கற்றல் தளங்களில் தங்கள் தனிப்பட்ட மற்றும் வணிக வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் எத்தனை எண்ணிக்கையான பாடநெறிகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். இது நிறுவனத்தின் உலகளாவிய இலக்கான '2025 ஆம் ஆண்டளவில் எதிர்காலத்திற்கேற்ற திறன்களைக் கொண்ட பணியாளர்களுக்காக மீள்திறன் அளித்தல் அல்லது மேம்படுத்துதல்' (Reskill or upskill employees with future-fit skills by 2025) என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டது. இந்த இலக்கை விரைவில் எட்ட முடியுமென யூனிலீவர் ஸ்ரீலங்கா எதிர்பார்க்கிறது.

யூனிலீவர் சௌபாக்யா திட்டமானது, தரம் 5 புலமைப்பரிசில்கள், க.பொ.த சா/த அல்லது உ/த பரீட்சைகள் போன்ற பல்வேறு கல்வி சாதனை இலக்குகளில் சிறந்து விளங்கிய, ஈடுபாடுகளைக் கொண்டுள்ள சௌபாக்யா தொழில்முனைவோரின் குடும்பங்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குகிறது. இத்திட்டம் கலை மற்றும் விளையாட்டுகளில் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களையும் அடையாளம் காட்டுகிறது. சௌபாக்யா இதுவரை 680 புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளதுடன், 200 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் தமது கல்விப் பயணங்களில் வெற்றிபெற்று இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அனுமதியும் பெற்றுள்ளனர்.

*~ (முற்றும்) ~*